**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 11/2021**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 10.03.2026 | | |
|---|---|---|---|
| பெயர்: | தியாகராஜன் (PW1– Cross ) | தகப்பனார் பெயர்: | கலியமூர்த்தி |
| கிராமம்: | கொண்டத்தூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 48/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 10.03.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.07)**

1. தாவா 8, 9 அயிட்ட சொத்துக்கள் வேளூர் வைத்தியநாதசுவாமிக்கு சொந்தமானது என முதல் விசாரணையில் கூறியுள்ளேன். கோயிலாரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு ஒரு மகள், இரண்டு மகன்கள் உள்ளனர். மகன்கள் பெயர் பாலமுருகன், மணிகண்டன். மேற்படி பாலமுருகன், மணிகண்டனுக்கு பிரதிவாதியின் தந்தையான கலியமூர்த்தி ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட உயில் விபரம் எனக்கு தெரியும் என்றாலும், அதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. தாவா சொத்துக்கள் சம்பந்தமாக கடந்த 08.11.2022–ல் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசி பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் எனக்கு பாகம் பிரித்து கொடுக்கப்பட்டதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்–13.14)**